திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கல்யாணசுந்தரம் அவர்கள் முதலமைச்சரிடம் சில கோரிக்கைகளை வைத்து ஏற்றுக் கொண்ட பிறகு தொழிலாளர்கள் அமைதியாக தொழில் செய்வதற்கு உள்ளே சென்ற நேரத்தில் அங்கே குசேலர் அவர்களும். சிந்தன் அவர்களும் சென்று தொழிலாளர்களைத் தூண்டி விட்ட காரணத்தால் அப்படிப்பட்ட விபரீத சம்பவங்கள் நடைபெற்றன. போலீசார் தக்க நடவடிக்கை எடுத்து, தக்க முறையில் பாதுகாப்பு கொடுக்காமல் இருந்திருந்தால் சிலர் இறந்திருக்கக் கூடும் என்ற உண்மை அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் வீராசாமி சொன்ன தகவல் தான் உண்மையானது. பத்திரிக்கைகளில் இந்தத் தகவல் எழுதவேண்டுமென்று கோருகிறேன்.

State Transport bus stops

*4 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the system of compulsory bus stops has been introduced in the City Bus Transport Service; and

(*b*) if so, the impact of the same on the efficiency of the bus service?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். சென்னை மாநகரிலுள்ள நெரிசல் மிகுந்த ஐம்பது பேருந்து நிறுத்துமிடங்களில் கட்டாயமாக பேருந்துகளை நிறுத்துவதற்கான முறையை அரசுப் போக்குவரத்துத் துறை நடைமுறைக்குக் கொணர்ந்துள்ளது.

(இ) இக் கட்டாய நிறுத்துமிடங்களில் பயணிகள் சிரமமின்றிப் பேருந்துகளில் ஒழுங்காக ஏறுவதற்கு உதவி செய்யப்படுவர். பயணிகளும் பேருந்துகளும் விரைவாகச் செல்ல இம்முறை வகை செய்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகையில் 50 இடங்களில் இப்படி கட்டாயமாக பஸ் நிறுத்துவதன் மூலம் பயணிகளை விரைவாக ஏற்றிச் செல்லவும், பஸ்கள் வேகமாகச் செல்லவும், இது நல்ல பயனுள்ள முறையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதே போல் நகரத்தில் இன்னும் ஏறத்தாழ 50 இடங்களில் கட்டாயமாக பஸ்களை நிறுத்தி இது போன்று பயணிகளுக்கு உதவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நிதி நிலைமையை அனுசரித்து மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இப்படி இந்த 50 இடங்களில் கட்டாயமாக பஸ்களை நிறுத்துவதற்கு அதிகச் செலவு எவ்வளவு ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது செலவைப் பொறுத்த கேள்வி அல்ல. எனினும் பொதுவாக பேருந்துகள் நின்று சென்றால் பயணிகள் ஒழுங்காக கியூ வரிசையில் நின்று செல்வதற்கு, கூடுமான வரையில் நெரிசல் நேரங்களில், பயன் உள்ளதாக இருக்கும் என்று அரசு கருதிய காரணத்தால், 50 இடங்களில் பரீட்சார்த்தமாக இந்த முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு மாதத்திற்கு அமலில் இருக்கும். அதற்குப் பிறகு இதை மேலும் விஸ்தரிப்பது பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

அரசுப் பாடப்புத்தகங்கள் விற்பனை உரிமை

*** 550 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசாங்கச் சார்பில் வெளியாகும் பாடப்புத்தகங்களின் விற்பனை உரிமை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1970-71-ஆம் ஆண்டில் ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திற்கும், அரசுப் பாடப்புத்தகங்களை விற்பனை செய்யும் உரிமையை வழங்க, பதிவு செய்யப்பட்ட புத்தகப் பதிப்பாளர்களிடமிருந்து தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் குத்தகை விவரம் கோரிப் பின் ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒருவர் வீதம் விற்பனையாளரை நியமித்தது.

1971-72 கல்வியாண்டில் சென்னை மாநகரில் அரசுப் பாடப் புத்தகங்களின் விற்பனையைப் பாடநூல் நிறுவனமே நேரடியாக மேற்கொண்டது. இம்முறைப்படி. சில்லரை விற்பனையாளர்கள் மூலமாகவும் உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தேவைக்கேற்பவும் புத்தகங்கள் விற்கப்பட்டன. சென்னை மாநகரத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சென்ற ஆண்டு மேற்கொண்ட முறைப்படி மொத்த விற்பனையாளர்கள் மூலமாகவே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்படும் அரசுப் பாடப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சில சமயங்களில் அரசு புத்தகங்கள் விற்பனைக்கு வருவதற்கு மிகக் காலதாமதம் ஆகி, காலாண்டுத் தேர்வு நடைபெறுகிறபோது கூட அரசு புத்தகங்கள் வருகின்றன என்று புகார் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1970-71-ம் ஆண்டில் காலத்தாழ்வு ஏற்பட்டது. ஆனால் 1971-72-ல் காலத்தாழ்வு ஏற்படாத வகையில், முன்கூட்டியே குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, ஒப்பந்தக் காரர்கள் மூலம் விற்பனைப் பணம் எவ்வளவு வரவேண்டியிருக்கிறது. அதை வசூலிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?